[1978 ஆகஸ்ட் 31

திரு. கே. பண்ணை சேதுராம் : ஆரம்பத்திலே ஆரம்பிக்கப் பட்ட அடிப்படையிலே, பின்பு தனியாக நிறுவப்பட்டது என்று கூறுகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் வேறு விதமாக இருக்கின்ற காரணத்தினால், தற்சமயம் நடமாடும் ஆஸ்பத்திரிகள் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே ஆரம்பிக்கப்பட்டது ஆரம்பச் சுகாதார நிலையம் அல்ல. ஆரம்பச் சுகாதார நிலையத்தோடு, துணையாக நிறுவப்பட்டது குடும்ப நல நிலையம் ஆகும். அங்கே நடமாடும் மருத்துவ மனைகள் ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

இயங்கும் மருத்துவ மனைகள்

*வினா 20—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இயங்கும் மருத்துவ மனைகள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன?

(ஆ) அதனால் ஏற்பட்ட பலன்கள் யாவை?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) இயங்கும் மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் 11 இடங்களில் உள்ளன.

(ஆ) இந்த இயங்கும் மருத்துவ மனைகளினால் தொலை தூரங்களில் இருக்கும் மிகச் சிறிய கிராமங்களில் இருக்கும் மக்கள் உடனடி மருத்துவ உதவி பெறுகின்றனர். அவசரமான, ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்ததின் மூலம் பல நோயாளிகளின் உயிர் காக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 11 மருத்துவ மனைகள் இயங்கினாலும், மாவட்டத்திற்கு ஒன்றுகூட கிடையாது. 35 லட்சம் ஜனத்தொகை கொண்ட மாவட்டமும் உண்டு ; 20, 25 லட்சம் பேர்களைக் கொண்ட ஜனத்தொகை உள்ள மாவட்டங்களும் உண்டு. மூலை முடுக்குகளிலும், மலை அடிவாரங்களிலும் உள்ள மக்களை எப்படிக் கொண்டு வரமுடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு உணருகிறார்களா? ஆகவே, அதிகப்படியான நடமாடும் மருத்துவ மனைகளை அமைத்து மக்களுக்குப் பலன் ஏற்படும் வகையில், நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

1978 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : இந்த நடமாடும் மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில் இரண்டு வகையான நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று, நடமாடும் மருத்துவ மனைகள் மாவட்ட மருத்துவ அதிகாரியோடு இணைக்கப்பட்டு 11 இடங்களில் இருக்கின்றன. மற்றொன்று, உறுப்பினர் அவர்கள் கேட்பதுபோல் நடமாடும் முறையில் மருத்துவ மனை கேட்கின்றார்கள். இதைக் குறித்து தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

கண்ணொளி வழங்கு திட்டம்

வினா 1— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசின் கண்ணொளி வழங்கும் திட்டத்தின்கீழ் 1975—76ஆம் ஆண்டில் பயன் பெற்றோர் எத்தனை பேர்?

விடை — 1,98,970 பேர்கள்.

கோட்டூர்புரத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள்.

வினா 2— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976ஆம் ஆண்டு சென்னை கோட்டூர்புரத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவாக ஏற்பட்ட உயிர்ச் சேதம், பொருட் சேதம் என்ன?

விடை : 1976ஆம் ஆண்டு சென்னை கோட்டூர்புரத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவாக ஏற்பட்ட உயிர்ச்சேதம் நான்கு. பொருட்சேதம் 20 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் குடிசை மாற்று வாரியத்தின் நட்டம் ரூ. 3.65 லட்சமும் வீட்டு வசதி வாரியத்தின் நட்டம் ரூ. 16.54 லட்சமும் ஆகும்.

தமிழகத்தில் உள்ள இனாம் கிராமங்கள்.

வினா 3— திரு. எஸ். இராமலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இன்னும் ரயத்துவாரியாக மாற்றப் படாத இனாம் கிராமங்கள் எத்தனை?

(ஆ) அதற்கான காரணங்கள் யாது?

விடை —(அ) 49.

(ஆ) சம்பந்தப்பட்ட நீதி மன்றங்களினால் செட்மெண்ட் பணி தடை செய்யப்பட்டுள்ளது.